முருகப்பெருமான் துணை

**மகான் கேது பகவான் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.04.2023**, புதன்கிழமை

1. பிரம்ம ஞானம் கண்ட குருவே
பிரணவ சூட்சுமம் ஆகவே வந்த
வரம்மிக கொண்ட அரங்கனே
வள்ளலே வாழுகின்ற ஞானியே
2. ஞானியே உன்பெருமை கூறி
ஞாலமதில் சோபகிருது தகர்திங்கள்
இனிமைபட முன்னான்கோர் திகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 13ம் நாள், 26.04.2023, புதன்கிழமை)
இயம்பிடுவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை கேதுபகவான் யானும்
அருளுவேன் அகிலம் ஞானபலமுற
வாசிவென்ற ஞானிகள் படை
வலம் வந்து ஓங்காரகுடில் தன்னில்
4. தன்னிலே ஆறுமுகப் பெருமான்
தங்களுக்கு இட்ட கட்டளையாக
அண்ணல் அரங்கனுடன் இருந்து
அளவிலா சக்திதனை தந்து
5. தந்து அரங்கன் மார்க்கமோடு
தான தருமமுடன் ஞானபலம்
சிந்தையாக்கி உலக மக்கள்
சிறப்பினை அடைய வேண்டி
6. வேண்டியே நித்தம் வரமருள
விரைந்து கலியுக மக்கள்
உண்டான பிரணவக் குடில்நாடி
உயர்ஞானி அரங்க மகான்ஆசி
7. ஆசி தீட்சைதனை அடைந்து
அனைவரும் ஞானம் பயில
வாசிதனை ஆறுமுகப்பெருமானே
வரமாகத் தரும் வண்ணம் ஆற்றல்

8. ஆற்றல் பலம் அடைந்துமே
அரங்கனை ஏற்ற மக்கள்
தேற்றம் பெறுவர் ஞானியாக
தேசமதை வழிநடத்தும் வண்ணம்
9. வண்ணமுடன் சக்தி கூடி
வருங்கால ஆட்சி முறையை
அண்ணல் அரங்கன் விரும்பும்படி
ஆற்றல் மிக்க ஞான ஆட்சியாக
10. ஆகவே அற்புதம்பட படைத்து
அகிலம் ஞானவேலி கண்டிட
வகையான ஞானவான்களாக
வையகமே நிரம்பிட நேரும்
11. நேரவே இனிவரும் காலமதில்
ஞானிகள் அறிவுரை ஆசியாக
அறுபத்துமூவர் ஆழ்வார்கள் என
அடுத்தடுத்து அரங்கனுக்கு அருளி துணைவருவோம்

அனுகூல ஆசி முற்றே

—சுபம்—